

# தென்னாடு

www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2051 வீறியெழல் ஆண்டு துலைத் திங்கள் (ஐப்பசி) 15ம் நாள் நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## இராசராசா சோழனின் 1035 வது அகவைத் திருநாள்



இவரின் அகவைத் திருநாள் துலைத் திங்கள் (ஐப்பசி சதயம்) செக்கு நாண்மீன் அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. 06 ▶



பஃறுளி ஆறும் மகேந்திரமலையும் முதற்சங்கமும் கொண்ட

# தென்புலம் நினைவாக தென்னாட்டில் ஐம்பூதநாதருக்கு தமிழில் குடமுழுக்கு

பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்திசை ஆண்ட தென்னவன் வாழி - சிலப்பதிகாரம்


பஃறுளி ஆற்றுடன், பன்மலை அடுக்குடன், முதற்சங்கம் கண்ட தென்புலத்தார் நினைவாக, அதித்தமிழர்களின் வாழ்விடமான தென்னாட்டில் தமிழ்நாட்டிற்கு வெளியே இன்றும் விஞ்சிநிற்கும் இலங்கை சிவபூமியில் யாழ்ப்பாண மாநகரில் கொக்குவிலில் அமைகிறது தென்னாடு செந்தமிழாகம சிவமடம். இவ்வுலகம் ஐம்பூதக் கலவையால் படைக்கப்பட்டது.

“நிலம், நீர், தீ, வளி, விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்” என்பது தொல்காப்பியம். இந்த பூதங்களின் உள்நின்று இயக்குவதால் இறைவனுக்கு இயவுள் என்று பெயர்.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி,
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி,
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி,
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி,
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

என்று மணிவாசகர் மகிழ்ந்து பாடுகிறார். தமிழ்நாட்டில் தனித்தனியாக ஐம்பூதங்களுக்கு ஒவ்வொரு தலமும் கோயிலும் உண்டு. உலகில் வேறெங்கும் காணாத 06 ▶

## திருவாசகத்தில் ஒரு வாசகம்



“மன்னுமாமலை மகேந்திரமதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்”

திருவாசகத்தில் பல இடங்களில் மகேந்திர மலையில் ஆகமம் அருளிய சிவபெருமானைப் பற்றி மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். மகேந்திரமலை என அவர் குறிப்பிடுவது குமரிக்கண்டத்தில் அதாவது தென்னாட்டில் மூழ்கிய மலைத் தொடர்களில் ஒன்றைத்தான். இதிலிருந்து சிவபெருமானால் சொல்லப்பட்டவையே ஆகமங்கள் என்று தெளிவாகிறது. கடல்கோளால் அவை அழிந்துபோக அவற்றை மீண்டும் தோன்றச் செய்த பெருமானே என விழித்துப்பாடுகிறார் மணிவாசகர்.

## கருமுதல் திருவரை



எங்கள் நாயன்மார்களின் திருமுறைகள் பிறவிப்பிணியினை அறுபவையாக மட்டுமல்லாமல், வாழ்வின் இருளை நீக்கி அருளைத் தரவல்ல அற்புதத்தமிழ்மந்திரங்கள். அவை வாழ்வியல் பலன்களை அடையவும் வழிகாட்டியாக இருக்கின்றன. அந்தவரிசையில், குழந்தை இல்லாதவர்கள் குழந்தைப்பேறு அதாவது நன்மக்கட்பேறு அடைவதற்கு பாடவேண்டிய பதிகம் (கோவில் - திருவெண்காடு, பாடியவர் - திருஞானசம்பந்தர், திருமுறை - இரண்டாம் திருமுறை, பண் - சீகாமரம்)

திருச்சிற்றம்பலம்
கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் றமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே
திருச்சிற்றம்பலம்

**நன்றிகள்: திருநணா சிவனடியார்கள் அறக்கட்டளை**

## வாழும்போது வாழ்த்துவோம்


# அமுதவிழாக் காணும் ஆயிரம் பிறைகண்ட லிங்கம் சிவத்திரு. க.பரமலிங்கம்

**திருவம்பலம் தென்னவன், தென்னாடு**

நயினை நாகபூசணி அம்மன் திருக்கோவிலின் அறங்காவல் சபைத் தலைவர் சிவத்திரு. கந்தசாமி பரமலிங்கம் அவர்களின் எண்பதாவது அகவைத்திருநாள் இன்று (20 அக்டோபர்). அவர் எல்லாம்வல்ல பரம்பொருளைக் கட்டியணைத்து நயினையம்பதியில் உறையும் அம்பாளின் அருளாசிகளைப் பெற்று நீடு வாழ்ந்து இன்னும் அளப்பரிய சிவப்பணியை செய்து வாழ்வாங்கு வாழ வாழ்த்திப் பணிகிறோம்.

வடக்கில் சைவம், மற்றும் சைவத்தமிழ் பண்பாடுகளில் இன்றும் அழியாத மாண்புடைய ஊர்களில் யாழ்ப்பாண தீவகங்கள் முன்னிலை வகிக்கின்றன என்றால் மறுக்கமுடியாது. கோவில்கள், விழாக்கள், சடங்குகள், மரபுகள், உறவுமுறைகள், இனசனத்தை முறைசொல்லி அழைக்கும் பண்பாடுகள், உபசரிப்பு, சொந்தபந்தங்கள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

நயினாதீவில் கல்விகற்று அங்கிருந்து இலங்கை நிர்வாகத்துறை சேவை பரீட்சையில் சித்திபெற்று பல



உயர் பதவிகளில் வகித்து பின்னர் இளைப்பாறி சொந்த ஊரிலே இறைபணிக்காக தன்னை அர்ப்பணித்து வரும் உயர்ந்த மனிதர்.

இவர் திரிகோணமலையில் வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணத்தில் ஆளுநரின் செயலராக, பின்னர் பொதுத்துறை நிர்வாகத்தில் செயலாளராக, கிராமிய அபிவிருத்தி செயலாளராக அத்துடன் இந்து அமைச்சின் ஆலோசகராக, இலங்கை ஜனாதிபதிக்கு ஆலோசகராக, வடக்கு மக்கள் சேவை ஆணைக்குழுவின் தலைவராக, மேலும் மேல் மாகாணசபை உறுப்பினராக தனது பரந்த விரிந்த பணிகளை ஆற்றி அந்த அனுபவத்தினை தனது ஊருக்கு பயன்படுத்த மீண்டும் நயினையில் வாழ்ந்து அவனருளால் அவன் தாள்களை வணங்கி வருகிறார்.

ஒருகாலத்தில் திரிகோணமலையில் நயினை மண்ணின் ஆளுமைகளாக பேசப்பட்டவர்கள் சிவத்திரு. பராமலிங்கம் மற்றும் சிவனடி சென்ற சிவத்திரு. விக்னேசுவரன். இவர்கள் கிழக்கு மாகாண வரலாற்றிலும் இடம் பிடித்துள்ளார்கள்.

கவாட் பல்கலைக்கழகத்திலும் கிடைக்காத ஆளுமைகளை ஈழத்து கோவில்கள், கோவில் சார்ந்த செயற்பாடுகள் உருவாக்கின்றன என்பதற்கு இவரும் ஒரு உதாரணம். இவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல ஆதிப்பரம்பொருளான சிவபெருமானையும் அவரின் பக்கமான பாகமான சக்தி வடிவான அம்பாளையும் வேண்டி பணிகிறோம்.

**மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்**

# அகநானூறு புறநானூறு ஆகிய சங்கப் பனுவல்களில் மூத்தோர் வழிபாடாக நடுகல்


கலாநிதி சு. குணேஸ்வரன்

**1. அறிமுகம்**

தமிழ்ப்பண்பாட்டின் வேர்களை சங்கப்பனுவல்களில் கண்டு கொள்ளமுடியும். எழுத்து வடிவிலான ஆதாரங்களாகிய அவை, தமிழ்த் தொல்குடிகளின் பண்பாட்டை அறிந்துகொள்ள உதவுகின்றன. சங்கப் பனுவல்களினூடாக பலியிடுதல், வெறியாட்டு, நடுகல் ஆகிய தொன்மையான வழிபாட்டு முறைகளையும் அவற்றுக்கூடாக மக்களின் பண்பாட்டையும் கண்டடைய முடிகிறது. அகநானூறு மற்றும் புறநானூற்றுப் பாடல்களில் அதிகமும் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அப்பாடல்கள் குறிக்கும் தொல்குடிப்பண்பாட்டை அறிவதன் ஊடாக மூத்தோர் வழிபாடாக நடுகற்கள் அமைக்கப்பட்டன என்ற உண்மையையும் கண்டடைய இயலும்.

**2. சங்கப் பனுவல்களில் மூத்தோர் வழிபாடாக நடுகற்கள்**

சங்க இலக்கியங்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, மலைபடுகடாம், பட்டினப்பாலை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றில் முப்பதுக்கும் மேற்பட்ட பாடல்களில் நடுகல் வழிபாடு மற்றும் பதுக்கைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் அகநானூறு (16 பாடல்கள்) மற்றும் புறநானூற்றுப் (12 பாடல்கள்) பாடல்



களிலேயே இவை அதிகம் எடுத்தாளப் பட்டிருக்கின்றன. இவ்விரு இலக்கியங்களின் வழி நடுகல் வழிபாடு பற்றி நுண்மையாக நோக்கமுடியும்.

**(அ) பதுக்கைகளும் நடுகற்களும்**

"நடுகல்" என்பது வீரன் இறந்த இடத்திலோ அல்லது வேறு இடத்திலோ அவன் நினைவாக எழுப்பப்படும் நினைவுக்கல் ஆகும். இது வீரக்கல் (ரநசழ ளுவழநெ) எனவும் அழைக்கப்பட்டது. இவை முதலில் செப்பனிடப்படாத நினைவுக் கற்களாகவும் குத்துக்கற்களாகவும் அமைக்கப்பட்டன. இறந்துபட்டோரின் வீரச்செயல் புடைப்புச் சிற்பமாகப் பொறிக்கப்பட்டனவும் வீரரின் பெயரும் அவர் புகழ்மொழியும் எழுதப்பட்டன வெனவும் குறித்த சங்கப்பனுவல்களால் அறியப்படுகின்றன.

இறந்த வீரரின் உடலை மூடிய கற்குவியல்கள் "பதுக்கை" என அழைக்கப்பட்டன. இவை கல்பதுக்கை, கல்திட்டை என இறந்தோரை மூடிய அல்லது புதைத்த மேடுகளாக அமைக்கப்பட்டிருந்தன. கற்பதுக்கைகள் மற்றும் இலை தழைகளால் மூடிய மேடுகளும் குறிக்கப்படுகின்றன. அதிகமும் பதுக்கையின் மேல் அமைக்கப்பட்ட நடுகல் அல்லது பதுக்கையின் அருகின் அமைக்கப்பட்ட நடுகல் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. பதுக்கைகள் இல்லாமல் தனியாகவும் நடுகற்கள் அமைக்கப்பட்டன.

கற்பதுக்கைகளுக்கு அருகில் நடுகற்கள் அமைக்கப்பட்டவற்றை "வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார் நடுகல் பீலி சூட்டி" (அகம் 35) என்ற பாடலில் கற்குவியலின் மேல் உள்ள நடுகல் தெய்வத்தை வழிபடுவதற்காக அக்கல்லில் மயிற்தோகைகளைச் சூட்டினர் எனவும் "உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல் நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்" (அகம் 289) என்ற பாடலில் உடலை மூடிய உயர்ந்த கற்குவியல்களில் காட்டுமல்லிகை ஏறிப் படரும். அம் மல்லிகையின் மலர்கள் கொண்டு நெடிது காலம் நிலைத்து நிற்கும் நடுகல்லாகிய தெய்வத்திற்கு நாட்பலியிட்டு வழிபாடு செய்வர் எனவும், "பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி" (புறம் 264) என்ற பாடலில் பருக்கைக் கற்களைக் கொண்டு மேடு அமைத்து மரலில் இருந்து எடுத்த நார்கொண்டு சிவந்த பூக்களால் கண்ணியைத் தொடுத்து அழகிய மயிற்பீலியைச் சூட்டிப் பெயரை எழுதி நடுகல்லும் நட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. "வெறியாட்டு போன்ற பிறிதொரு சடங்காகக் கல் நட்டு வழிபடும் நடுகல் சடங்கைக் கூறலாம். அகழ்வாய்வுகள் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ள "பதுக்கைகள்" எனப்படும் கற்படைகள் தமிழகம் முழுவதும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. ஊரிருக்கைகள் அமைந்த பகுதிகளில் இவ்வகையான நடுகற்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. வீரனை நினைவுபடுத்தும் வகையில் கல் நடப்பட்டு வழிபடப்பட்டவை இவை. இதனை நடுகல் என்று அழைக்கிறோம்."(1) இவற்றினூடாக கற்பதுக்கைகள் அமைக்கப்பட்டு அருகில் நடுகல் நாட்டப்பட்டு வழிபாடியற்றப்பட்ட செய்திகள் தெளிவாகின்றன.

**(ஆ) நடுகல் மற்றும் பதுக்கைகள் காணப்படும் இடங்கள்**

நடுகற்கள் பெரும்பாலும் ஊரின் எல்லையில் அல்லது ஊரின் ஒதுக்குப் புறத்தில் போர் நடைபெற்ற இடங்களில் அமைக்கப்பட்டன. அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்களில் அதிகமான குறிப்புக்கள் இவை குறித்து உள்ளன. "பெரிய ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும் நின்றாங்குப் பெயரும் கானம்" (அகம் 387) என பெரிய முகபடாம் அணிந்த யானை மீது செல்லும் அரசியராயினும் அவ்விடத்தினின்றும் மேலும் செல்ல நினைக்காது திரும்பிச் செல்லும் அச்சம் மிகுந்த பாலைநிலம் எனவும், ஒருமுறை சென்றவர் மீளவும் செல்லத் தயங்கும் நீண்ட சுரவழியில் அந்நடுகற்கள் உள்ளன எனவும், போர் நடந்த பாலைநிலங்களில் வரிசையாக அமைக்கப்பட்ட நடுகற்களின் அருகில் வாள்களும் கேடகங்களும் வைக்கப்பட்டன என்றும் பாலைத்திணைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

புறநானூற்றுப் பாடல்களில், போர் நடந்த இடங்கள், ஊரின் எல்லைப் புறங்களுடன் ஏரிக்கரைகளில் ஆற்றங்கரைகளில் காட்டுப்பகுதிகளில் அமைக்கப்பட்ட குறிப்புக்களும் உள்ளன. "இதுவரை தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற நடுகற்கள் பெரும்பாலும் மக்கள் வாழ்கின்ற அல்லது வாழ்ந்ததாக அறியப்படும் ஊருக்கு வெளியில்தான் கண்டறியப்பட்டுள்ளன. ஈமக்காடுகள் உள்ள இடங்களிலும் நடுகற்கள் இருந்துள்ளன. இவை உணர்த்துவது யாதெனில் நடுகற்கள் எடுக்கப்படும் இடங்களை நோக்குகையில் வீரன் மடிந்த போர்க்களமாகவோ அல்லது அவனைப் புதைத்த இடமாகவோதான் அனுமானிக்க முடிகின்றது."(2) இதனூடாக நடுகற்கள் அதிகமும் ஊருக்கு வெளியேயும் ஊரின் எல்லையிலும் போர் நடைபெற்ற இடங்களிலும் அமைக்கப்பட்டவை தெரியவருகின்றன.

**(இ) நடுகல் பற்றிய தொல்காப்பியச் சூத்திரம்**

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நடுகல் அமைக்கும் வழக்கம் தொல்தமிழர் குடிகளிடம் இருந்ததென்பதும் அது சடங்கு முறையாகப் பேணப்பட்டது என்பதும் தெரியவருகிறது. "நடுகல் என்பதன் நேர்ப்பொருள் நடப்படுகின்ற கல் - வீரக்கல் நினைவுச் சின்னக் குத்துக்கல் என்பனவாகும். இத்தகைய பழக்கங்கள் திடீரென எழுவன அல்ல என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். மேலும் அப்பழக்கங்களிற் சிலகூறுகள் பாடல்களைவிடப் பழமையானவை என்பது முறையானது. தொல்காப்பியம் இதனை கவிதைக்குரிய பாடுபொருளாக மட்டும் காட்டவில்லை. பாடல்கள் முழுமையாகக் காட்டும் ஒரு மெய்ம்மை என்பதனோடு அதனை ஒரு சடங்காகக் காட்டுவதோடு ஆறு நிலைகளை உடையதாக அக்கல் நடுதலை எண்ணுகிறது." (3)

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணர" (4)


இங்கு நடுகல் அமைத்தல் முதல் அதன் வழிபாடு வரை ஆறு படிமுறை உரைக்கப்படுகிறது.

i. காட்சி என்பது ஒரு கல்லினைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் செதுக்குதல்
ii. கால்கோள் என்பது அக்கல்லினை நடுவதற்கு நல்ல நேரம் குறித்தல்
iii. நீர்ப்படை என்பது அக்கல்லை தூயநீர் கொண்டு கழுவுதல்
iv. நடுதல் என்பது அக்கல்லினை எவ்விடத்தில் நிறுவவேண்டும் எனத் தீர்மானித்து நடுதல்
v. பெரும்படை என்பது இறந்துபட்ட வீரனின் சிறப்புக்களை அக்கல்லில் பொறித்தல் மற்றும் அவனின் வீரச்செயல்களைக் குறித்து போற்றி விழா எடுத்தலும் விருந்தும் பிறவும் ஆகும்.
vi. வாழ்த்துதல் என்பது இறந்த வீரனை நடுகல் வழியாக வழிபடுதல்

இதனூடாக தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நடுகல் வழிபாடு இருந்தது என்பதும் அது சடங்காக மக்களால் தொடர்ந்து பேணப்பட்டதும் அறியப்படுகிறது.

**3. நடுகற்கள் அமைத்துப் பாடப்பட்டோரும் நடுகற்களின் அமைப்பும்**

அகநானூற்றுப் பாடல்களில் போரில் இறந்த வீரர்களுக்கு பெயரும் பீடும் எழுதி வேல், கேடகம், வைக்கப்பட்ட நடுகற்களும் பின்னர் செம்மறிக்குட்டி பலியிடப்பட்ட



செய்திகளும் பதிவாகியுள்ளன.

தழையிட்டு மூடிய கற்குவியல் (அகம் 109), கற்குவியல் (அகம் 289), வீரரின் நடுகல் (அகம் 387), காட்டுயானை ஆள் என உதைத்த நடுகல் (அகம் 365), மறவர் நடுகல்லில் அம்பு தீட்டுதல் அதனால் நடுகல்லின் எழுத்து பக்கம் தேய்ந்து காணப்படல் (அகம் 297), உப்புவணிகரின் வண்டில் முனை அழுத்தி சிதைந்த நடுகல் (அகம் 343), பெயரும் பீடும் எழுதிய நடுகல் (அகம் 179), பெயரும் பீடும் எழுதிய எழுத்துடை நடுகல் (அகம் 53), கற்குவியல் கொண்ட பதுக்கையும் நடுகல் முன் வேலும் கேடகமும் வைக்கப்பட்டபட்டவையும் (அகம் 67), பெயரும் பீடும் எழுதி வேல் கேடகம் வைக்கப்பட்ட நடுகல் (131), நடுகல் தெய்வத்திற்கு மயிற்றோகை, துடிமுழக்குதல், செம்மறிக்குட்டி பலியிட்ட செய்தி குறிப்பிடப்படுதல் (அகம் 35) ஆகியன அகநானூற்றுச் செய்யுட்களின்வழி அறியப்படும் நடுகல் பற்றிய குறிப்புகளாகும்.

மேற்குறித்த அகநானூற்றுப் பாடல்களில் கற்குவியற் பதுக்கைகளும் பின்னர் பெயரும் பீடும் எழுதி வேல் கேடகம் வைக்கப்பட்ட நடுகற்களும் காணப்பட்டுள்ளன. பலியிடப்பட்ட செய்தியும் வருகிறது. இங்கு படிப்படியான வளர்ச்சி முறை தெரிகிறது. புறநானூற்றுப் பாடல்களில் அரசர்கள், நிலத் தலைவர்கள், போரில் இறந்த வீரர்கள் ஆகியோருக்கு நடுகற்கள் அமைத்து வழிபடப்பட்ட குறிப்புகள் உள்ளன. இவை புறநானூற்றுப் பாடல்களில் ஒரு சடங்கு முறைக்கு மாற்றம் பெறுவதை அவதானிக்கலாம்.

புறநானூற்றுப் பாடல்களில் கோப்பெருஞ்சோழன் மீது நட்புக் கொண்டிருந்த பொத்தியார் பாடிய (புறம் 221, 222, 223) பாடல்களிலும்: அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடிய (புறம் 232) பாடலிலும் நடுகல் வழிபாடு குறிக்கப்படுகிறது. இவை தவிர ஏனைய புறநானூற்றுப் பாடல்களில் அதிகமும் நிரைமீட்கும் போரிலும், அரசனுடன் கூடவே பகைமுடிக்கும் போரிலும் இறந்த வீரர்கள் மீதே அதிகமான பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

ஆநிரை மீட்கவரும் போரில் மாண்டவன் நடுகல். (புறம்.260), பகை கவர்ந்த ஆநிரை மீட்டுத்தந்த போரில் வீழ்ந்த கரந்தை மறவனின் நடுகல். (புறம்.261), நிரைமீட்டு உயிர்துறந்த வீரனுக்கு பீலியும் கண்ணியும் சூட்டி கல் நட்டமை. (புறம். 264), நிரைமீட்டு உயிர் துறந்த வீரனின் கல்லுக்கு மாலைசூட்டுதல். (புறம். 265), கணவன் பகைமுடித்து வருக என முன்னோரின் நடுகல்லைப் பரவியமை. (புறம் 306), போருக்குச் சென்ற கணவன் நடுகல் மிகுந்த ஊரை உடையவன் என ஊரின் சிறப்பை பாடுதல். (புறம். 314), பலியிட்டு நன்னீராட்டி நெய்விளக்கேற்றி நடுகல்லை வழிபடும் சிறப்பை பாடியமை. (புறம். 329), களிறினை எறிந்து தாமும் வீழ்ந்த மலைநாட்டுத் தலைவனின் நடுகல்லைத் தொழுவோம் என பாடியமை. (புறம். 335) முதலான புறப்பாடல்களில் நடுகல் குறித்து உரைக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

தென்னாடு
www.thennadu.org

சிவத்திரு.செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாட்டுத் திண்ணை,
சைவ மாணவர் சபை (பதிவு – HA/4/JA/343)
0715588737

# புதியாய் ஒரு பழையது

ஓயாமல் சுழன்று கொண்டிருக்கும் உலகம், தினமும் தன்னுள் புதிய மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு தன்னைத் தகவமைத்து நிலைக்கிறது. கடந்த காலத்தின் இறந்து போன ஓசை தான் "வரலாறு" எனும் பெயர் பெற்று எதிர்காலத்தை தீர்மானிக் கின்றது. எந்த இனம் தன் வரலாற்றை சரியாக அடுத்த தலைமுறைக்கு கடத்தவில்லையோ, அந்த இனத்தின் எதிர்காலம் எதிரும் புதிருமாய் அமைந்துவிடும் என்பது காலம் எமக்கு கற்றுத் தந்த பெரிய பாடம். நீண்ட நெடிய வரலாற்றையும், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலான இலக்கண இலக்கியச் செழுமையும் கொண்டு, உலகின் கலாசாரத்தின் முதல் நிலத்தில் முகிழ்ந்த தமிழ் குடிகள், காலத்தாலும், கயமைகளாலும் தன் நிலை மாறித் தவிர்க்கின்ற பரிதாப நிலையை இன்று பார்க்கின்றோம்.

எது எங்கள் வழிபாடு? எது எங்கள் பண்பாடு என்பதைத் தாண்டி, எது எங்கள் சொற்கள்? எது எங்கள் எழுத்து என்கின்ற வரையில் குழம்பிப் போயுள்ள நிலை ஒருவித குற்ற உணர்வை எம்மிடையே ஏற்படுத்தியதால், இந்தக் குழப்பமும், தாழ்வு நிலையும் எதனால்? ஏப்போது? உருவானது என்ற கேள்வியின் தாக்கத்தால், இறந்துபோன அந்தக் காலத்தின் குறுகிப்போன ஓசையின் அதிர்வால் தேடல்கள் தொடர்கின்றன. ஆழ்ந்தும் அகன்றும், அகழ்ந்தும் தேடியதில் குழப்பங்கள் கூடியது. தேளிவின் ஒளியும் பிறந்தது "குழம்பாமல் தெளிவது எப்படி?"

இந்த நிலையில் தான் உலகின் முதுபெரும் நிலமாகிய குமரிக்கண்டம், கடலோடு கலந்ததையும், அங்கிருந்து குடிகள் பெயர்ந்து உலகமெல்லாம் கால் ஊன்றியதையும், தென்னவர் வழிபாடாக அந்தத் தென்குமரியில் கடலோடு கலந்ததையும் நினைத்து வழிபடும் வரலாற்றின் அறுபடாத நீட்சியாய் உள்ள சிறு இழையைப் பற்றி தென்னாடாக, கொக்குவிலில் ஒரு சிவமடமும், அங்கிருந்த வெளியீடான இந்த மாத இதழும் புதியாய் ஒரு பழையதைப் பறைசாற்றப் பிறந்துள்ளது. சங்ககால வாழ்வியலின் தாக்கம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகமடைந்த இனத்தின் உள்ளாற்றல் என்பவற்றால் இன்று உலகின் அதிகார தலைமைப்பீடமாகத் தான் தன்னைத் தகவமைத்துக் கொண்டிருக்க வேண்டும், ஆனால் இன்று தன் தனித்துவங்களைக் கூட தொலைந்து அல்லாடும் இனமாக ஆனது எப்படி?

இந்தக் கனதியான கேள்விகளுக்கு விடை பல்வேறு கோணங்களில் ஆராயப்படவேண்டியது ஆயினும், ஒட்டுமொத்தமாக தம் இருப்புக்களை உணராத இளைய தலைமுறையாலும், தம்பொறுப்புக்களை உணராத மூத்த தலைமுறையாலும் இந்த நிலை உருவாகியிருக்க வேண்டும் என்று ஊகித்து அறியலாம். ஏந்த இனம் தன் வரலாற்றை தலைமுறைகளுக்கு ஏதோ ஒரு வகையில் கடத்தவில்லையோ, எந்த இனம் தன் சுயத்துக்கு ஆபத்தான விடயங்களையும், பிற பண்பாடுகளில் இருந்து உள்ளீர்த்துக் கொள்கின்றதோ அந்த இனம் எதிர்காலத்தில் தன் இருப்பை கேள்விக் குறியாக்கும். அல்லது தன் தனித்துவங்களை தம் மூதாதை யர்களின் புதைமேடுகளில் தேடுகின்ற அவலநிலைக்கு தள்ளப்படும். அந்த நிலையில் தான் நாமும் உள்ளோம் என்பதே வருந்தத்தக்க உண்மை. ஆனவை ஆகிப்போக,

கிடைத்த தடங்களில் இருந்து ஆராய்ந்து எமது சுயத்தை அறிவை மட்டுமன்றி அதை இளைய பிள்ளைகள் அறியத்தக்க வகையில் பாடசாலைகள் தோறும் பரப்பும் முகமாகவும் எவற்றிலும் தாம் தங்கியிருப்பார்கள் இல்லை எல்லா பண்பாட்டு கோலங்களுக்கும் முன்னர் எம்மிடம் தனித்துவமான பண்பாடு மிக நேரிய சீரிய வகையில் தோன்றி வளர்ந்திருந்தது என்ற தெளிவோடு அவர்கள் நிமிர்ந்து நிற்கும் வகையிலும், இந்தத் "தென்னாடு" மற இதழின் முதல் பிரதியை எம் முன்னவர்களின் அருவ அருளோடு வெளியிட்டு வைக்கின்றோம்.


"நாமர்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம்"



## மாதம் ஒரு பாடசாலை

# வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயம்

வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தி யாலயம் ஆறுமுக நாவலரால் யாழ்ப்பாண நகரத்திலுள்ள வண்ணார்பண்ணை என்னு மிடத்தில் 1848 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அக்காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார்களால் தொடங்கப்பட்ட மேல்நாட்டு முறைப்படி கல்வி கற்பிப்பதற்கான பாடசாலைகளில், இந்துப் பிள்ளைகள் மேல் கிறிஸ்தவ மதம்



வலிந்து திணிக்கப்படுவதையும், உள்ளூர்ப் பண்பாடுகள் சிதைக்கப் படுவதையும் எதிர்த்து, யாழ்ப்பாணப் பிள்ளைகளுக்கு அவர்களது பண்பாட்டுச் சூழலில், நவீன பாடங்களைக் கற்பிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதே இப் பாடசாலை. இதனால் இது யாழ்ப்பாண மக்களின் தேசிய எழுச்சியின் சின்னமாகவும் திகழ்கிறது என்று கருதப்படுகிறது. இது ஆண், பெண் இரு பால் மாணவர்களும் பயிலும் ஒரு கலவன் பாடசாலையாகும்.

யாழ்ப்பாணத்தில் நாவலர் சந்தி என அழைக்கப்படும், காங்கேசந்துறை வீதி, நாவலர் வீதிகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது இப் பாடசாலை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி என்பவற்றுக்கு அண்மையில் அவை இரண்டுக்கும் இடையில் இது உள்ளது. மாவட்டத்தின் மிகவும் முக்கியமான அமைவிடத்தைக் கொண்டிருந்தபோதும் இப்பாடசாலை, பெரும்பாலும் அயலிலுள்ள மாணவர்கள் மட்டுமே கல்வி கற்கும் பாடசாலையாக இருக்கிறது.

நாவலர் நிறுவிய இப்பாடசாலையின் நோக்கம் பெரு வெற்றி பெற்றது எனச் சொல்லமுடியாது. எனினும், பொதுவாக யாழ்ப்பாணச் சமூக வரலாற்றிலும், குறிப்பாக அதன் கல்வி வரலாற்றிலும், இதன் தோற்றமும், இது தோன்றுவதற்கான காரணங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

சைவத்தைப் பரப்புவதற்காகவும், கிறித்தவ மதத்துக்கு இந்துக்களை மதம் மாற்றுவதை எதிர்ப்பதற்காகவும் கிறிஸ்தவ மிஷன் பாடசாலையில் தான் வகித்த பணியைத் துறந்து வெளியேறிய நாவலர், இந்து சமயத்தின் பெருமைகளை எடுத்துச் சொல்வதன் மூலமும், பாடசாலைகளை உருவாக்குவதன் மூலமும், இந்து சமயத்தை மறுமலர்ச்சியுறச் செய்து அதனைப் பரப்புவதற்காக முப்பது ஆண்டுகள் பணி புரிந்தார் என இலங்கையில் கல்வி வரலாறு பற்றி நூலொன்றை எழுதிய கே. எச். எம் சுமதிபால என்பவர் குறிப்பிட்டுள்ளார்ஜ1ஸ.

பிற்கால ஆய்வாளர்கள் சிலர், முழு யாழ்ப்பாணச் சமூகத்தினதும் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல், இந்துப் பண்பாடு என்னும் பெயரில் யாழ்ப்பாணத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வு காட்டும் சமூக அமைப்பைத் தக்கவைத்துக் கொள்ளவே நாவலர் முயன்றார் என்கின்றனர்

இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறு வேண்டுமாயின் உங்கள் பாடசாலை அல்லது கல்லூரி குறித்து 350 சொற்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : aathan@thennadu.org

# சைவம் வளர்த்த நாயன்மார்களும் சித்தர்களே!

**ஆ.சசிநாத்**

சித்தர்கள் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர்கள் என்பது பொருளாகும். 'சித்' என்றால் அறிவு. ஞானம் என்பதும் இதற்கு இணையான பொருளாகும். சித்தர் என்றால் அவர்கள் பல விதமான சித்துக் களைச் (அற்புதங்களை) செய்பவர்கள், இரசவாதம் செய்து பித்தளையைத் தங்கமாக மாற்றுபவர்கள், கூடு விட்டுக் கூடு பாய்பவர்கள், அட்டமா சித்திகள் செய்ய வல்லவர்கள், எண்வகை யோகங் களைச் செய்பவர்கள், இறை உண்மைகளை மறைத்துச் (பரிபாஷை) சொல்பவர்கள் என்றெல்லாம் கூறப்பெற்றுள்ளன. பொதுவாக, சித்தர்கள் சமூக மீறல்கள் கொண்டவர்களாக விளங்கினர். நாம் பின்பற்றும் மரபுகளுக்குள்ளும் அளவு கோல்களிற்குள்ளும் அடங்காதிருந்தனர். இவர்கள் சாத்திரக் குப்பைகளையும் கோத்திரக் கோளாறுகளையும் சாடிய வர்கள்.

இந்நிலை நின்றொழுகியவர்களாக நாயன்மார்களை அடையாளப் படுத்தலாம். அந்நிய மதங்களின் ஆதிக் கத்திலிருந்து சைவத்தையும் சைவப் பாரம்பரியத்தையும் கட்டிக் காப்பாற்றிய வர்களாகவே நாயன்மார்கள் போற்றப் படுகின்றனர். மேலும், நாயன்மார்கள் காலச் சமுதாயத்தில் வாழ்ந்த மக்களி டையே இருந்த சாதி, சமய வேறுபாடு களைக் களையவும், இறைவன் ஒருவன் என்பதை வலியுறுத்தவும், வையத்துள் மக்களது வழிகாட்டியாகவும், சமூக முன்னேற்றத்திற்கான அச்சாணியாகவும் திகழ்ந்தனர். இதற்காகப் பல அற்புதங் களைச் செய்தும், சமுதாயத்தில் பேணப் பட வேண்டிய வாழ்வியல் கருத்துக்களைத் தம் பாசுரங்களூடாகவும் விதைத்துச் சென்றுள்ளனர். இந்தவகையில் இறை நம்பிக்கை உடையவர்களாகத் திகழும் நாயன்மார்களைச் சித்தர்கள் என்ற வரையறைக்குள் உள்ளடக்கவில்லையாயி னும், அவர்களின் சமூக நோக்குகள் மற்றும் செயற்பாடுகள் சித்தர்களோடு வைத் தெண்ணத் தோன்றுவதிலிருந்து நாயன் மார்களையும் சித்தர்களாகக் கொள்ள இடமுண்டு என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பல வகையான சித்துக்களைச் செய்வ தனால் இவர்கள் சித்தர்கள் எனப் பலரும் கருத்துரைத்துள்ளனர். இந்நிலையில் நாயன்மார்களை நோக்கின், பல வகையான அற்புதங்களை நிகழ்த்தி சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தை நிலைநாட்டியவர்களாவர். இதற்குத் திருமுறைப்பாடல்கள் சான்றாக விளங்குகின்றன. 'வாசி தீரவே காசு நல்குவீர்.....' என்ற பதிகம் பாடி படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியமை, 'பூத் தேர்ந்தாயன கொண்டு நின் பொன்னடி....' ஏன்ற பதிகம் பாடி ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியமை என்பன சம்பந்தரது அற்புதங்களுக்கு எடுத்துக் காட்டுக்களாகும். நாவுக்கரசரது அற்புதங் களுக்கு எடுத்துக்காட்டாக, 'ஒன்று கொலாமவர் சிந்தை....' என்ற பதிகம் பாடி அப்பூதியடிகளது மகன் மூத்த திருநாவுக்கரசரை உயிர்ப்பித்தமையைக் காட்டலாம். இவ்வகையான அற்புதங்கள் சித்தர்கள் செய்யும் சித்துக்களோடு ஒத்துப் போகின்ற தன்மையில் நாயன்மார்களைச் சித்தர்கள் என ஏற்றுக் கொள்ளல் தவறா காது.

கூடு விட்டுக் கூடு பாய்தல் என்பது சித்தர்களின் இயல்பு. உயிரானது ஒரு உடலிலிருந்து வேறொரு உடலுக்குள் புகுவது தான், கூடு விட்டுக் கூடு பாய்தல் என்றில்லை. உயிருடன் இருக்கும் போது அறிவு வடிவாகிய குரு, தன்னை அறி வென்று அறிவித்த சீடனின் உடலுக்குள் காது வழியாக நுழைந்து அவனையும் அறிவு வடிவமென்று அறிவித்து நீயும் நானும் ஒன்றுதான். எனக்காட்டி அத்துவிதமாக்கிக் கூடிக் கலந்து களித்தலே கூடு விட்டுக் கூடு பாய்தல் என்பதாகும். இதனைத் திருமூலர், 'அறிவுவடிவு என்று அறியாத என்னை.....' என்றும், 'இருந்தார் சிவமாகி எங்கும் தாமாகி....' என்றும் கூறுகிறார். வள்ளலார், 'பிறிவேதி இனியுனைப் பிடித்தனம் உனக்கு நாம்: அறிவே வடிவேனும் அருட் பெருஞ்சோதி' என்கிறார். இத்தகைய சித்தர் நிலையினை உணர்ந்தவர்களாக நாயன்மார்களும் திகழ்ந்திருக்கின்றனர். உதாரணமாக, மாணிக்கவாசகர், 'சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனைக்கருளியவாறு யார் பெறுவார் 'கண்டலா தருளுமில்லை கலந்தபின் பிரிவதில்லை' என்றும் உரைத்திருக்கக் காணலாம்.

பரம்பொருள் நம் உடம்பிற்குள்ளே உள்ள சிற்சபையில் அமர்ந்து அம்பலத்தில் நடராசராய் நடனமாடி ஒலிசெய்து கொண்டிருப்பதைச் சித்தர்கள் தெளிவாக உரைத்துள்ளனர். திருமூலர், 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்....' என்றும், 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்......' என்றும் ஔவையார், 'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்: உடம்பினுள் உத்தமனைக் காண்' என்றும் பாடிய திறத்தால் உணரலாம். இச்சிந் தனைப் புலத்தைக் கொண்டவர்களாகவே நாயன்மார்களையும் நோக்க முடியும். திருநாவுக்கரசர், 'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக.....' என்ற பாடலூ டாக உடம்பின் முக்கியத்துவத்தினை உணர்த்தி நிற்கின்றமை நாயன்மார்களும் சித்தர் கொள்கை உடையவர்கள் என்பதை உணர்த்தி நிற்கிறது. மாணிக்கவாசகர், 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி' என்றுரைப்பதும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

சிவாயநம எனப்பெறும் ஐந்தெழுத் துக்களால் ஆன மந்திரமே பஞ்சாட்சரம் எனும் ஐந்தெழுத்து மந்திரம். சைவப் பெருமக்களின் உயிராகவும் அவர்களின் கண்மணி போலவும் விளங்குவது இந்த ஐந்தெழுத்து மந்திரம் ஆகும். இதன் பெருமையை உணர்த்த 'நமசிவாயப் பதிகம்', 'பஞ்சாக்கரத் திருப்பதிகம்' என இரண்டு பதிகங்களையும் திருஞானசம் பந்தர் திருவாய் மலர்ந்தருளியுள்ளனர். நாவுக்கரசரும், 'கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே' எனப் பாடியருளியுள்ளார். இத்தகு பெருமை பொருந்திய பஞ்சாட்சரம் பற்றி, காகபுசுண்டர் என்ற சித்தர், 'ஆதி என்ற மூல மந்திரம் ஐந்தெழுத்து' என்கிறார். ஔவையார், 'சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை' என்கிறார். ஆதியாக பரீட்சிக்க ஒண்ணாத வித்தாக, சிவமயப் பொருளாக, உயிராக, பின்னல் கிரண விந்து நாதமாக சிவ சக்தியாக இருக்கும் அப்பொருளே மூலமந்திரம். உலகில் தோன்றியுள்ள அனைத்துச் சமயங்களிலும் உள்ள அனைத்து மூல மந்திரங்களும் அந்த மெய்ப்பொருளாகிய ஆதியையே குறித்து நிற்கின்றன எனும் கருத்துத் தளத்தில் நாயன்மார்களும் சித்தர்களும் ஒரே தன்மை உடையோராய்த் திகழ்தல் ஈண்டு நோக்குதற்குரியது.

உலகிலுள்ள சமயங்கள் அனைத்தும் மனிதகுல மேம்பாடு எனும் ஒரு இலக் கினையே அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகின்றன என முதலில் சமயங் களுக்குள்ளே சமத்துவத்தை பேணுதல் புலப்படுத்தியுள்ளனர். மாணிக்கவாசகர், 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்கிறார். சமயங்கள் பலவாக இருப்பினும் அவை கூறும் பரம்பொருள் ஒன்றே. சித்தர்களும் ஓரிறைக் கொள்கை உடைய வர்கள் என்பதும் மனங்கொள்ளத்தக்கது. திருமூலர், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்கிறார். சிவவாக்கியர்இ 'அங்கும் இங்கும் ஆகி நின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ' என்றும், அகத்தியர், 'சக்தியே பராபரமே ஒன்றே தெய்வம்', 'தானென்ற தானே தானொன்றே தெய்வம்' என்றும் சமயப் பொதுமையை வலியுறுத்துவது நாயன் மார்களோடு ஒத்து நோக்குதற்குரியது.

உயிர்கள் மீது செலுத்தும் அன்பே உண்மையான வழிபாடாகும். திருமூலர், 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்கிறார். மேலும் பிறர் துன்பம் கண்ட போது அதைத் தன் துன்பமாகக் காண வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் சமூகத்திலே ஏற்றத்தாழ்வுகள் என்பதே இல்லாமற் போய்விடும். இதனை திருமுறைகளில் பதிவு செய்துள்ளனர். வண்ணலார், 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் பசியினால் இளைத்தே' என்று பாடுவதிலிருந்தும், பதிகப் பெருவழி சிறக்க வாழ்ந்த காரைக்காலம்மையார் இறைவனை அடைய ஆண், பெண் பேதம் இன்றி உள்ளத்தில் கொள்ளும் அன்பே முக்கியம் என நிலைநாட்டுவதிலிருந்தும் அறியலாம். 'பிறந்து மொழிபயின்ற பின்னாளெல்லாம் காதல் சிறந்து நின் சேவடி சேர்ந்தேன்' என்கிறார் அம்மையார்.


சமூகத்திலே புரையோடிக் கிடந்த சாதி வேற்றுமைகளுக்கு எதிராகக் கண் டனக்குரல் எழுப்பியவர்களாகச் சித்தர்கள் விளிக்கப்படுகின்றனர். சிவவாக்கியர், 'பறைச்சியாவ தேதடா பணத்திலாவதே தடா', 'சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெல்லாம்' என்றும், பாம்பாட்டிச் சித்தர், 'சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்' என்றும் கடுவெளிச் சித்தர், 'ஔவா என்ற பல சாதி யாவும் ஒன்றென்று அறிந்தே உணர்ந்து உறவோதி' என்றும் திருமூலர், 'ஒன்றே குலம்' என்றும் கலகக்குரல் எழுப்பி சமூகத்தை மடைமாற்றம் செய்வதில் தீவிரம் காட்டியதைப் போன்று நாயன் மார்களும் சாதி பேதங்களைக் கண்டித்த வர்களாக விளங்கியிருப்பதைக் காணலாம். 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பரா கில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே' என்று அப்பரடிகளும் 'சாதி குலம் பிறப்பு என்னும் சுழிபட்டுத் தடுமாறும்......' என்று மணிவாசகரும் கூறும் கருத்துக்கள் மேற்போந்த கருத்துக்கு வலுச்சேர்க்கிறது. மேலும், பெரியபுராணம் சிவனடியார் வரலாற்றைக் கூறும் சிறப்பு மிக்க நூல். இதில் சேக்கிழார் சாதிசமயங்களை நீக்கி ஆதி சைவர், பிராமணர், இடையர், சத்திரியர், குறுநில மக்கள், வைசிகர், வேளாளர், பரதவர், வேடர்இ சான்றார், சாலியர், குயவர், பாணர், புலையர் என அனைத்து அடியவர்களும் இறைவனைச் சேர்ந்தார்கள் என நாயன்மார் வரலாற்றில் தெளிவாக்கியுள்ளார். அந்தணராகிய நமிநந்தியடிகள் சாதிமுறை பார்க்க, அவர் கனவிலே தோன்றிய கண்ணுதற் பெரு மான், 'ஆன மறையோய் ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம் கணங்கள் ஆன பரிசு காண்பாய் என்று அருளிச் செய்து அங்கு எதிர் அகன்றார்' என்று சேக்கிழார் கூறுவது சாதியமைப்பு முறை இல்லை என்பதைக் காட்டவல்லது.

ஒவ்வொரு சமூகமும் தனக்கான சமூக நடவடிக்கைகளைத் தன் நிலவியல் மற்றும் புறச்சூழலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்கின்றன. சமூக வாழ்வு முரண் பாடின்றி இணக்கமாகத் திகழ வேண்டு மெனின் தனிமனிதன் தன்னளவில் செம்மைப்படல் வேண்டும். சித்தர்கள் போதைப்பொருள்களைக் கண்டித்து வந்தனர். 'வெறிகாட்டி மயங்கிய கள் குடியாதே கஞ்சாப்புகை பிடியாதே' என்கிறார் கடுவெளிச்சித்தர். 'ஒல்லையாறி உள்ளம் ஒன்றிக் கள்ளம் ஒழிந்து வெய்ய சொல்லையாறித் தூய்மை செய்து....' என்கிறார் திருஞானசம்பந்தர். இந்நிலை யில் சமூகத்தை நல்வழிப்படுத்துவதில் வகுத்த வழிவகைகளில் இரு தரப்பின ரையும் நோக்குகின்ற போது ஒற்றுமைத் தன்மை புலப்படுகிறது.

உயிரினங்களில் மனிதன் பெருமளவில் முன்னேறி வியத்தகு சாதனைகள் பல படைத்திருப்பினும் பாலுணர்வும் பசியுணர்வும் அவை தொடர்பான போராட்டங்களும் அவனை விட்டு நீங்கியபாடில்லை. இத்தேவைகள் அவனை முடக்கிக் கொண்டிருக்கின்றன. ஆதலின் பெண்ணாசையை ஒழித்தல் என்பது தலையாய ஒழுக்கமாகி விடுகிறது. 'கற்றதேல் ஒன்றுமில்லை காரிகை யாரோடாடிப் பெற்றதேற் பெரிதும் துன்பம்' என்றும், 'கண்ட பேச்சினிற் காளையர் தங்கள் பால் மண்டி பேச்சினும் மாதரைச் சேராதே' என்றும் அப்பர் பெண் வேட்கையினைத் தவிர்த்து வாழ்தல் சிறந்தது என்கிறார். இது 'எழில் பெண்ணாசை கொண்டு மாளாதே', 'மாய்கைத் தேவடியாள் தனம் பண்ணாதே' போன்ற சித்தர் கொள்கையினைத் தழுவியிருப்பது, நாயன்மார்களையும் சித்தராக்க இடமளிக்கிறது.

சித்தர்கள் சமய வழிபாடுகளையும் மூடப் பழக்கவழக்கங்களையும் கண்டித்தவர்களாகவே காணப்படுகின்ற னர். விக்கிரக வழிபாட்டை முற்றாக வெறுத்தனர். 'நட்ட கல்லைத் தெய்வ மென்று நாலுபுஷ்பம் சாத்தியே....', 'கோயிலாவதேதடா குளங்களாவதே தடா....' போன்ற சித்தர் பாடல்களை எடுத்துக் காட்டலாம். ஆனால் நாயன்மார் கள் கோயில்களையும் வழிபாடுகளையும் முதன்மைப்படுத்தியிருந்தனர். 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்...' எனச் சம்பந்தரும் 'நிலை பெறுமா றெண்ணு தியேல் நெஞ்சே நீ வா நித்தலு மெம் பிரானுடைய கோயில் புக்கு' என அப்பரும் பாடியிருத்தல் சான்றாகும். ஆயினும் சித்தர்கள் அனைவரும் கோயிலையும் வழிபாடுகளையும் எதிர்த்தவரல்லர். போலிகளையே எதிர்த்தனர். ஈழத்துச் சித்தர்கள் ஆலயங்களை முதன்மைப்படுத்தி யமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

சித்தி பெற்றவர்களாகிய சித்தர்களின் கருத்துக்கள், கொள்கைகள் என்பன ஒரு சமூகத்தை மடைமாற்றம் செய்வதாகவே அமைந்துள்ளன. அத்தகைய நிலையிலே வாழ்ந்தவர்களாகவே நாம் நாயன்மார்களையும் கருதமுடியும். அற்புதங்களைச் செய்தல், கூடு விட்டுக் கூடு பாய்தல்இ தன்னை - அகத்தை உணர்தல், பஞ்சாட்சரத்தின் மகிமை, சமயப்பொதுமைஇ சாதி பேதங்களைக் களைதல், தனிமனித ஒழுக்கம் போன்ற பல விடயங்களையும் சித்தி - அறிவு பெற்றவர்கள் நிலையில் நின்று உணர்த்தியிருப்பதானது 'சித்தர்' என்று அழைப்பதற்குப் பொருத்தமானதாக அமைகிறது. மேலும் நாயன்மார்களின் செயற்பாடுகளைச் சித்தர்களோடு ஒப்பிட்டு நோக்குகின்ற போது கொள்கைகளவிலும் மனதளவிலும் ஒருவராகத் தோன்றும் பட்சத்தில் நாயன்மார்களும் சித்தர்களே என்பது தெளிவாகிறது.



# சிவத்திரு (சிவஸ்ரீ) - பிரம்மஸ்ரீ

**சிவத்திரு. ஈசான. கி. பிராதாபன் தேசிகர்**

இலங்கையில் அந்தணர் தம் பெயரைப் பாவிக்கும் போது பிரம்மஸ்ரீ என்பது பெரிதும் புழக்கத்திலுண்டு. பெரும்பாலான குருக்கள்மாரும் ஏனைய பூசகர்களும் இங்ஙனம் பெயருக்கு முன்னால் இட்டுக்கொள்ளும் வழக்கம் உடையவர்களாகவுள்ளனர். ஆச்சாரிய அபிடேகம் செய்துகொள்ளாதவர்கள், தாம் சிவஸ்ரீ (சிவத்திரு) என்று போட்டுக்கொள்ள முடியாதென்பதால், பிரம்மஸ்ரீ போட்டுக்கொள்வதாக கூறுகின்றனர்.

ஏனைய பூசகர்பணி செய்யாதவரும் பிரம்மஸ்ரீ போட்டுக்கொள்வதற்கு இதையே விளக்கமாக உரைக்கின்றனர்.

1) இறைவன் (பிரம்மம்) என்பது பொதுப்பெயர்.

சிவம் என்பது சிறப்புப் பெயர். எதற்கு மங்கலமும் திருவருட்சிறப்பும் மிகுதியாய் உண்டென்றால், ஒப்பற்ற தன்மையில் மிகுந்து உயர்ந்ததாய் இருப்பது சிவம் என்னும் சொல்லுக்கேயாகும்.

“சிவனெனும் ஓசை அல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மை உளதே” என்கிறார் அப்பர் பெருமான்.

ஆயிரம் பேருகந்தானும் ஆரூர் அமர்ந்தவம்மானே - என்று அப்பர் பெருமான் கூறுவதிலிருந்து, பிரம்மம் (இறைவன்) முதலிய பல பொதுப்பெயர்களும் எம்பெருமானுக்கு உகந்ததேயாயினும், சிவம் என்பது நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்திற்குரியது. “சிவ” என்பது காரண பஞ்சாட்சர மந்திரம். பிரம்மம் என்னும் சொல்லிலும், சிவனென்னும் சொல் மந்திரமாகவே விளங்கும் சிறப்பை உடையது.

“கற்றுணைப் பூட்டியோர் கடலினிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமசிவாயவே”
- திருநாவுக்கரசர்

“நமசிவாய வாழ்க் நாதன் தாள்
வாழ்க” - மாணிக்கவாசகர்

சிவாயநம என்று சிந்தித்திருப்
போர்க்கு அபாயம் ஒரு நாளும்
இல்லை” - ஔவையார்.

இப்பிரமாணங்களுக்கு அமைவாக தெளியக்கூடியது யாதாயின், சிவஸ்ரீ(சிவத்திரு) என்பதற்குப் பதிலாக பிரம்மஸ்ரீ என்று இட்டுக்கொள்வது, கனியிருக்க காய் கவர்ந்த நிலைக்கு ஒப்பாவதோடு, சிவநிந்தனையும்கூட!

2) ஆச்சாரிய அபிடேகம் செய்துகொள்ளாத பூசகப்புனிதர்கள், தமக்கு சிவஸ்ரீ (சிவத்திரு) இட்டுக் கொள்ளக்கூடாதென்பது மயக்கமேயாம். சிவஸ்ரீ (சிவத்திரு) என்பது சிவபெருமான் எழுந்தருளுமாறு புனிதம் காப்போன், சிவபெருமானே மெய்ப்பொருள் என்பதை தெளிந்தோன் முதலிய கருத்துகளை உணர்த்தவேயாம்.

சமயதீட்சை, விசேடதீட்சை எடுத்து ஆன்மார்த்த சிவபூசை செய்யும் நல்லார் அனைவருக்கும் உகந்ததே சிவஸ்ரீ (சிவத்திரு).

ஆச்சாரிய அபிடேகம் செய்யப் பெற்றோர் குருக்கள் என்னும் பதத்தினைப் பயன்படுத்துவதால், குருக்கள் மாருக்கும் குருக்கள் அல்லாத ஏனைய பூசகர்களுக்குமிடையில் எந்தக் குழப்பத்தையும் சிவஸ்ரீ (சிவத்திரு) பாவிப்பது ஏற்படுத்தாது.

3) ஸ்மார்த்த மதத்தினை ஒழுகும் பிராமணர் முதலியோர் பிரம்மஸ்ரீ என்று இட்டுக்கொள்வதால், பிரம்மஸ்ரீ என்று இட்டுக்கொள்ளும் சைவ அந்தணரை ஸ்மார்த்தராகச் சைவர் குழம்பும் நிலையும் இப்பிரம்மஸ்ரீயினால் உண்டாகும்.

பிரம்மஸ்ரீ என்பது பிரம்மத்தை உணர்ந்தோன் என்னும் பொருளை வெளிப்படுத்தி நிற்கும். பிரம்மஞானம் என்பது சைவசமய சுத்தாத்துவிதம் தவிர்ந்த ஏனைய சங்கர அத்வைதம் முதலியன, சைவசமயப்பிரகாரம் பிரம்மஞானம் ஆகா.எனவே சங்கர ஸ்மார்த்தமதத்தார் தம்மை பிரம்மஸ்ரீ என்பது சைவரைப்பொறுத்தமட்டில் அரைகுறை வைத்தியப்படிப்பு படித்து, ஐயம் திரிபுகளின்றி கற்காது குறையில்விட்டவர் தமக்கு மருத்துவர் என்று பட்டம்சூட்டிக்கொள்ளலை ஒத்தது.

சைவசமயத்தாருக்கு இச்சொல் தேவையோவெனின், ஏற்கனவே கூறியவாறு பிரம்மம் சிவஞானமே யென்று தெளிந்தபிறகு காரண பஞ்சாட்சரமாகச் சிவஸ்ரீ (சிவத்திரு) இருக்க, பிரம்மஸ்ரீயைப் பற்றி நிற்பது சிவநிந்தையும் ஸ்மார்த்த அறியாமையுமே!!!

4)சத்தியகாமன் பிராமணன் என்று வைதீகம் ஏற்பதாலும், சுவாமி ஞானப்பிரகாசரை பிராமணனென்று ஏற்றுக்கொண்ட அண்மைய வரலாற்றுப் பிரமாணத்தாலும், கேரளநாடு முதலிய பல்வேறு இந்தியப்பூர்விகமுடைய ஸ்மார்த்தவம்சாவழியுடைய இலங்கைப் பூசகர், குருக்கள் முதலியோரை ஈழத்துச் சைவசமூகம் எக்கேள்வியும் எழுப்பாது. எனவே, சிவபெருமானால் தீட்சிக்கப்பட்ட கோத்திரங்களில் ஒன்றை தீட்சைவழி தேர்வுசெய்து, சிவப்பிராமணராகவே பூசைசெய்க. சைவசமூகம் மகிழ்வுறும். ஆனால், ஸ்மார்த்தர் என்னும் நிலைபற்றியே வாழவிருப்பின், சைவக்கோயில்களில் பூசைசெய்வதை கைவிடுதலே அறம். உரிமையில்லாத ஒன்றில் உரிமை எடுத்தல் தவறாகும். ஒரு இஸ்லாமிய இமாம், தேவாலயத்தில் பூசையைச் செய்தலுக்கு ஒப்பான காரியத்தை இந்துமதமென்ற ஒற்றைப்படுத்தல் ஸ்மார்த்தமதத்தார்க்கு சைவசமயத்துள் ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றது.

அண்மையில் கோயிலொன்றில் அருமையாக பண்டிதர் மு. கந்தையா பெருமானார் கூறியவாறான, சைவ சமய நெறிக்கு அமைந்த பூசையைப் பார்த்து, மெய்யுருகி நின்றேன். அக்குருக்களுடன் பூசைமுடிந்தபிறகு அவரின் பத்திச்சிறப்பையும் பூசைச் சிறப்பையும் கூறி மகிழ்ந்தபோதுதான், அவர் தாம் கேரளநாட்டு ஸ்மார்த்தப் பாரம்பரியத்தை உடையவரென்றும், ஆனால் தமது தந்தையார் சிவப்பிராமணருக்குரிய பூசைகளையே மேற்கொள்ளவேண்டுமென்று தமக்கு போதித்ததாகவும் கூறி, தாம் சிவப்பிராமணராகவே வாழ்வதாகவும் கூறினார். ஆலயங்களினுள் எவர்காலிலும் விழேன் என்னும் கொள்கையை மனதால் மறந்து, அவர்பாதம் தொட்டு வணங்கினேன். இவரைப்போல் ஏனைய ஸ்மார்த்தமதப் பரம்பரையினரும் நேர்மையோடு நடந்துகொண்டால், சைவசமயம் தழைத்தோங்கும்.



5)சரியை,கிரியை,யோகம்,ஞானம் என்னும் நாற்பாதங்களில் ஒன்றினை சிவபூசையாகக்கொண்டொழுகும் நல்லாரே சிவஸ்ரீ (சிவத்திரு) இட்டுக்கொள்ளலாம் என்பதால், பிரம்மத்தை உணராதாருக்கு பிரம்மஸ்ரீயும் பொருத்தமில்லையென்பதால், ஏனையவர் பிறப்பால் யாராயினும் திரு / திருவாளர்/ திருமதி/ செல்வி என்று இட்டுக்கொள்வதே சால்புடையது. அங்ஙனம் இன்றி, தமக்கு சிவஸ்ரீ (சிவத்திரு) / பிரம்மஸ்ரீ என்று இட்டுக்கொள்வது நாடிபிடித்து இதயத் துடிப்பை உணரமுடியா வொருத்தன் மருத்துவனென்று கூறிக்கொள்வதற்கு ஒப்பாகும் என்பதோடு, சிவநிந்தைக்குரிய பாவமும் சேரும்.

6) சிலர், விஷ்ணுஸ்ரீ, ஐயப்பன்ஸ்ரீ என்றும் பாவிக்கின்றனர்.எல்லாம் சிவன் என்னும் ஞானம் எய்திய சிவப்பிராமணர், இங்ஙனம் பாவித்தல் சிவநிந்தையும் அறியாமையுமேயாகும். பூசைசெய்யும் ஆலயத்திற்கு ஏற்ப தம்முன்னால் இட்டுக்கொள்ளவேண்டிய சிவஸ்ரீயை கழட்டுவதும் பூட்டுவதுமாக இருக்கும் அறியாமையை,சிவநிந்தையை என்னென்று கூறுவது?

7)ஒருசொல்த்தானேயென்று சிலர் நினைக்கலாம்.இதில் என்ன.... எல்லாம் ஒன்றுதானேயென்றும் சிலர் நினைக்கலாம். ஆனால், இந்தவொரு சொல்த்தான் நம்மையும் நம் பண்பாட்டையும் திருத்துவதற்கும் மீட்பதற்கும் நாம்செய்யவேண்டிய முதற்படியான மாற்றம்.

“சிவனெனும் ஓசை அல்லது
அறையோ உலகில் திருநின்ற
செம்மை உளதே”
-அப்பர் பெருமான்

சைவசமயமாய் எழுவோம்!
சைவசமயமாய் எழுவோம்!
சைவசமயமாய் எழுவோம்!

எல்லாம் திருவருட்சம்மதம்

---

## தென்னாடு ஐம்பூதநாதருக்கு முதுமுனைவர்

# மு.பெ.சத்தியவேல் முருகனார் குடமுழுக்கு ஆலோசனை



தமிழ்நாட்டைச் சார்ந்த வாரியாரின் வழிவந்த ஞான தேசிகர், முதுமுனைவர்.மு.பெ. சத்தியவேல் முருகனார் தென்னாடு ஐம்பூதநாதர் செந்தமிழாகம குடமுழுக்கு திட்டமிடலுக்கு முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தார். மடத்தினால் கேட்கப்பட்ட ஐம்பூதக்கலவையான இறைவனின் பெயரை ”ஐம்பூதநாதர்” என்று இறைவாக்காக அருளியவர் சத்தியவேல் முருகனார் ஐயா அவர்களே.

ஐயாவே வந்து எங்கள் மடத்தின் கடவுள் மங்கல நீராட்டு செய்வதாக திட்டமிடப்பட்டிருந்த வேளை தென்னாட்டில் வந்த கடல்கோள் போல், முழு உலகிலும் ”கோவிட்” எனும் தீநுண்மிப் பரவி ஏற்படுத்திய தாக்கத்தால் வரமுடியாமல் போனது. ஐயாவின் முதன்மை மாணவர் சிவத்திரு.செல்லத்துரை பிரசாத் மற்றும் இணுவில் ஞானலிங்கேசுவரர் ஆலயத்தினை சார்த்த சிவத்திரு. திருச்செல்வம் தர்சன் , சிவத்திரு.சிவகுமரன் சிவலதன் ஆகியோரால் நடாத்திவைக்கப்பட்டது. தென்னாடு மடம் சார்பாக எங்கள் வழிகாட்டி முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் ஐயவிற்கு மனமார்ந்த நன்றிகள்.

## அருள்மிகு ஐம்பூதநாதர் அருட்கோலம் ஈழத்து சித்தர்கள் தவக்கோலம்




தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் ஐம்பூதக்கலவையாக எழுந்தருளியுள்ள ஐம்பூதநாதருடன் , ஈழத்து சித்தர்கள், பதினெண்சித்தர்கள், நாயன்மார்கள் , இராசராச சோழன், ஆறுமுகநாவலர் என சைவசமயத்தின் அடையாள நாயகர்களும் தவக்கோலமாக எழுந்தருளியுள்ளனர் . உலகிலே ஈழத்து சித்தர்கள் அனைவரிற்கும் ஓரிடமாக கருங்கல் சிற்பங்களாக செதுக்கி எழுந்தருள வைத்திருப்பது இதுவே முதலாவதாகும். இங்கு வந்து அவர்களின் அருளாசிகளையும் பெற்றுக் கொள்ளலாம்

## சொற்சிலம்பம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | | 3 |
| | | 4 | | | 5 | | |
| 6 | | 7 | | 8 | 9 | | |
| | | | 10 | | | | |
| | | | | | | 11 | |
| 12 | | | | 13 | | | |
| | | | | | | | 14 |
| 15 | | | | | | | |

**இடமிருந்து வலம்**

*1. ஆகாயத் திருத்தலம்*
*4. இதை மதியால் வெல்லலாம்*
*5. ஆழி (திரும்பியுள்ளது)*
*6. என்னுடையது என்ற எண்ணம்*
*13. தவம் செய்தால் கிடைப்பது*
*15. செல்வம்*

**மேலிருந்து கீழ்**

*1. இராசிகளில் ஒன்று*
*2. அறிவிக்காமலே அறிவது*
*3. ஆணவம், கன்மம், மாயை, திரோதானம் மாயேயம் ஆகிய மலங்களைக் கொண்டவர்கள்*
*7. சைவத் தமிழர் திருநாள்*
*8. முருகனின் சடாச்சர மந்திரம் (இறுதி இரு எழுத்துக்கள் திரும்பியுள்ளன)*
*9. எம்பிரான் தோழர்*
*10. அலங்காரக் கந்தன் உறையுமிடம்*
*11. பெண் தெய்வம்*
*12. சிவ சின்னங்களில் ஒன்று*
*14. இதற்கு பிரம்மாவிற்குப் பொருள் தெரியாது*

இக்குறுக்கெழுத்து சட்டகத்தைப் பூர்த்திசெய்து பெயர், முகவரி, தொடர்பு இலக்கத்துடன் அனுப்பி வைக்கும் வாகசர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
25.11.2020

**அனுப்பவேண்டிய முகவரி:**
தென்னாடு
செந்தமிழாகம சிவமடம்,
குளங்கரை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

## பஃருளி ஆறும் மகேந்திரமலையும்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வகையில் ஐம்பூதங்களுக்கும் சேர்த்து ஒரு தலக்கோயிலாக தென்னாட்டில் இலங்கை சிவபூமியில் யாழ்ப்பாண மாநகரில் கொக்குவில் செந்தமிழாகம சிவமடம் அமைகிறது. அங்கே ஐம்பூதநாதர் அருட்கோலம் கொண்டு எழுந்தருளுகிறார், எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவன். இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று செந்தமிழாகம சிவமடம் என்ற பெயரில் அப்பெயரிற்கேற்றால் போல் செந்தமிழாகம முறைப்படி செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட ஐம்பூதநாதருக்கு வீறியெழல் (சார்வரி) ஆண்டு விடைத் திங்கள் (வைகாசி) 21 ஆம் நாள் (3-6-2020) புதனன்று விளக்கு (சுவாதி) நாண்மீன், பதின்மும்மைப் பிறைநாள் (திரயோதசி திதி - மூன்றாம் வளர்பிறை) அமுத ஓகம் காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்ளாக விடை வான் வேளையில் வெள்ளி நல்லோரையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற்றது.

# இராசராசா சோழன் மற்றும் நம்பியாண்டார் நம்பி

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தஞ்சைப் பெரும் கோவிலெனும் சைவத் தமிழர் அடையாளச் சின்னத்தினை உருவாக்கிய தமிழ் மாமன்னன். அத்துடன் இன்றும் எங்களிடம் எஞ்சியிருக்கும் திருமுறைகளை மீட்டுக்கொடுத்த தமிழ் பேரரசன். இவரின் அளப்பரிய சேவைகளை நினைந்து இவருக்கும் அவற்றினை தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பி அவர்களுக்கும் தென்னாட்டில் எழுந்தருட்சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

சுந்தர சோழனுக்கும் சேர நாட்டு வானவன் மாதேவிக்கும் துலைத் (ஐப்பசி) திங்கள் செக்கு நாண்மீன் (சதய) நன்னாளில் பிறந்த இவரது இயற்பெயர் “அருள்மொழிவர்மன்”. இராஜகேசரி அருள்மொழிவர்மன் என்ற பெயராலேயே தன் ஆட்சியின் தொடக்க காலத்தில் இம்மன்னர் அழைக்கப்பட்டார். இவர் ஆட்சியின் 3ம் ஆண்டு முதலே இராசராச சோழன் எனப்பட்டார்.விசயாலய சோழன் நிறுவிய சோழ அரசு இவர் காலத்திலும் இவர் மகன் இராசேந்திர சோழன் காலத்திலும் மிக உயர்நிலை எய்தியது. இராசராசனின் காலம் பிற்காலச் சோழர் வரலாற்றில் மட்டுமன்றித் தென்னிந்திய வரலாற்றிலேயே ஒரு பொற்காலமாகும்.

# சிவப்பிரகாசக் கதவம்

**1. ஒளியான திருமேனியுடைய களியாரவரும் ஆணை களல் நாளும் மறவாமல் வழிபடுவதால் கிடைக்கும் பேறு என்ன?**

ஞானப்பிரகாசமான திருமேனியும், ஞானசக்தி கிரியாசக்தி ஆகிய இருமதமும் கொண்ட விநாயகரது வலது திருவடி மலத்தைச் சக்தி மடக்கி மெய்யறிவைத்தரும் ஞானத்தைக் கொடுக்கும் ஞானசக்தியாகும். இடது திருவடி கிரியா சக்தி ஆகும். எனவே இவைகள் கொடிய வினையை, அதன் வலிமையை நீக்குவதாக இருக்கின்றன. இந்நிலையில் மலமடங்கி வினை வலிமை நீங்க ஞானம் கிடைக்கின்ற நிலையும் காணப்படுகின்றது.இதுவே சிவம் பிரகாசிக்கின்ற நிலை உயிருக்கு ஏற்படுகின்றது என்க. இத்தன்மையினால் விநாயக அடியார்களுக்கு சிவப்பேறு கிட்டும் நிலை உண்டு.

## பொது அதிகாரம்

**2. உமாபதிசிவாச்சாரியார் தில்லை கூத்தப்பெருமானுக்கு வணக்கம் செய்யுமாற்றைத் தருக.**

சிதம்பர நடராஜரே உமாபதியின் வழிபடு கடவுளாரே. பேரொளிப்பிழம்பாகியவரே, திருவடி ஞானத்தை வடிவமாகக் கொண்டவரே, உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காண நடம் செய்பவரே, கொண்றைமாலை, சந்திரன், கங்கை, பாம்பு என்பவற்றை வளர் சடையில் சேர வைத்தவரே, நீங்குவதற்கரிய பிறவித்தொடர்ச்சி உயிர்களுக்கு நீங்கும்படி ஆனந்தத்தில் ஆடுபவரே, திருச்சிற்றம்பலத்திலே நின்று தேவர்கள் போற்றி வணங்குபவரே, அருள் ஞான மூர்த்தியே, தங்களது தாமரை மலரன்ன திருவடிகள் தலை மீதும் அறிவினிலும் அழுத்தமாகப் பொருத்த் வைத்துப் போற்றி, வணங்கி துதி செய்வோம் என வணக்கம் செய்கின்றார்.

**3. அன்னையருள் பாதமலர் சென்னி வைப்பதால் நடைபெறுவது யாது?**

*1.* பரந்த பராபரை (பராசக்தி) பக்குவமான உயிர்களுக்கு அனுக்கிரகம் செய்வது.

*2.* ஆதி (திரோதான சக்தி) சக்தி ஆணவ மலத்தை பரிபாகம் செய்வதற்குப் போகத்தை நுகர உயிர்களுக்கு உதவுவது.

*3.* பரனது இச்சை சிவானுபவத்தை உயிர்கள் பெறும் பொருட்டு இச்சாசக்தியாகிய கருணை வடிவினதாக அமைந்திருந்து செயற்படுவது.

*4.* இந்த அனுபத்தைப் பெறுவதற்காக வேண்டிய பரஞானத்தை அருளுவது.

*5.* கிரியாசக்தி மூலம கன்மத்துக்கு ஏற்ற வகையில் உயிர்களுக்கு உடம்பை உண்டாக்குவது.

*6.* பக்குவமடைந்த உயிர்களை ஞானசக்தியால் சிவத்துடன் சேராது நிற்கப் பண்ணுவது.

*7.* சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயைகளை பொருத்தி நின்று உடல், கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருள் என்பன உயிர்களுடன் செயற்பட தான் ஒன்றாய் நிற்பது.

*8.* ஐந்தொழிலிற்கும் அன்னை தான் காரணமாய் நிற்பது சிவசக்தியொன்றே வெள்வேறு இடங்களில் வெள்வேறு பெயர் பெறும். சக்தி நீக்கமன்றி நிற்கும் இயல்புடையது. ஆதலால் ஒருமை, இருமை என இறை, சக்தி நிற்கும் நிலையைக் கூறுவர்.

**4. சிவசக்தி காரிய வேறுபாட்டால் பலவகைப் பெயர் பெற்று நிற்கும் நிலையைக் காட்டுக?**

*1.* ஐந்துவகைச் சக்திகள்: பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி.

*2.* பராசக்தி: இது சிவசக்தியின் சொரூபம். பக்குவமான உயிர்களுக்கு அருள் புரிவது இச்சக்தியின் செயற்பாடாகும். இது தடையில்லை ஞானமுள்ளதாகும். சிவன் இச்சக்தியில் அதிட்டித்த நிலையில் “பரமசிவன்“ எனப் பெயர் பெறுவர்.

*3.* ஆதிசக்தி: இது பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறாக உள்ளது. இதை சிவன் தோற்றவிப்பார். மேலும் திரோதான சக்தி, அருட்சக்தி என்ற பெயர்களும் உளது. மறைத்தல் தொழிலைச் செய்யும் சக்தியும் இதுவே ஆகும். பசுக்களுக்குப் போகத்தைக் கொடுத்துப் புசிக்கப்பண்ணி, ஆணவமல சக்தியை பக்குவமாக்கும் நிலையில் செயற்படுவதுதான் இதன் தொழில் .இந்நிலையில் இச்சக்தி அத்தவாக்களைக் கலந்து பசுவுடன் அவையேயாகி உடனாய் நின்று செலுத்துவதன் மூலம் ப்குவ நிலையை அடையப்பண்ணுகிறது. சிவன் இந்த சக்தியை அதட்டித்த போது “திரோபவன்“ எனப் பெயரிடுகிறார்.

*4.* இச்சாசக்தி: ஆதிசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறான பசுக்களுக்குரிய மலத்தைச் சக்திமடங்கும் வகையில் இறைபெரும் கருணை கொண்டு நினைப்பதான நிலையும் பக்குவ உயிர்களுக்கு சிவானுபவம் கிட்டும் வண்ணம் ஏற்படும் இறையின் பெரும்கருணைச் சங்கற்பமும் ஆகும் என்பதே இச்சக்தியாகும். சிவன் இச்சக்தியை அதிட்டித்த நிலையில் “இச்சிதா“ எனப் பெயர் பெறுகிறார்.

*5.* ஞானசக்தி: இச்சாசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறான இது பசுக்களின் மலச்சக்தி மடங்கச் செய்யும் உபாயங்களையும், சிவானுபவம் உயிர்கள் பெறுவதற்கான வழிகளையும் அறிகின்ற அறிவுநிலையான சக்தியாகும். அதாவது ஒவ்வொரு உயிரகளுக்குமான வினைப்பயன்களை தனித்தனியே அறிந்த நிலையையே இது குறிக்கின்றது. சிவன் இதனை அதிட்டித்த போது “நாதா“ எனப் பெயர் பெறுவர்.

*6.* கிரியாசக்தி: இது ஞானசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறாகும். மேலும் ஆன்மாக்களது கன்மத்துக்கமைய சரீரங்களை உண்டாக்குகின்ற சக்தியாகும். பசுக்கள் வினைப்பயன்களை அனுபவிக்கச் செய்யும் வண்ணம் செலுத்தும் நிலையில் அவர்களைப் பிரபஞ்சக் காரியப்படுத்தும் அளவுக்குச் செயற்படுவதே இந்த சக்தியாகும். சிவன் இந்த சக்தியை அதிட்டித்த நிலையில் “கர்த்தா“ எனப்படுவர்.

*7.* மூவகைச்சக்திகள்: ஆரிணி, செனநி, உரோதயித்திரி

*8.* ஆரிணி: ஆதிசக்தியின ஒரு கூறாகவே இச்சக்தி அமைகிறது. உருத்திரனை அதிட்டித்து நின்று அழித்தல் தொழிலைச் செய்வதும் இதுவே ஆகும். மேலும் அருளல் தொழிலைச் செய்கிறது. “ஹ்ரு“ என்ற அடியில் பிறந்த சொல்லே ஹாரிணி என்பதாகும். “ஹ்ரு“ என்பதன் கருத்து அழித்தல் என்பதாகும். பசுக்களது தனு முதலானவற்றை மாயையில் ஒடுக்கும் நிலையிலும் இச்சக்தி உளது. அத்துடன் பக்குவ மலரான உயிர்களை பரசிவத்தில் சேர்ப்பதையும் செய்யும் நிலையில் உளது. இச்சக்திக்குரிய சக்திமான் “சத்தர்“ எனப்படுகிறார்.

*9.* செனநி: பிரமனை அதட்டித்து நின்று பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமாய் இருப்பது. கன்மங்களை நீக்கவும், ஆணவமல பரிபாகம் செய்யவும் உதவுகின்றது. செனநி என்ற சொல் “ஐந்“ என்னும் அடியில் பிறந்ததாகும்.

**சிவத்திரு. ந.சிவபாலகணேசன்**

**நன்றி, இலங்கை சைவநெறிக்கழகம்**

**சிவத்திரு . திருவம்பலம் தென்னவன்**

# தென்புலத்தார் வழிபாடு



தென்புலத்தார் வழிபாடு - மறைமதி (அமாவாசை) தினத்தில் தென்புலத்தார் வழிபாடு மற்றும் பேரொடுக்கம் (மகாலய அமாவாசை )

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே - திருமந்திரம்

**மானிடப்பிறப்பின் சிறப்பு**

உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கு மிழலையாமே

நூல்களில் உரைக்கப் பெறும் எண்பத்துநான்கு லட்சம் பிறப்பு வேறுபாடுகளையும் முறையாகப் படைத்து, அவ்வவற்றின் உயிர்கட்கு உயிராய் அங்கங்கே விளங்கி நிற்போனாகிய சிவபிரான் உறையும் கோயிலானது மலைகளில் தங்கியுள்ள மேகங்கள் எழுந்து வந்து முழவுபோல ஒலிக்க, ஆண்மயில்கள் பல நடனமாட, வண்டுகள்பாட, பரிசிலாகக் கொன்றை மரங்கள் மணம் பொருந்திய மலர் இதழ்களாகிய பொன்னைத் தர மெல்லிய காந்தள் மலர்கள் கை போல விரிந்து அதனை ஏற்கும் திருவீழிமிழலையாகும் என்பது பொருள்.

என்ற திருஞானசம்பந்தர் சுவாமி அவர்களின் பாடலின் படி, 1.19X10-5 நிகழ்தகவில் தான் மனிதராக பிறக்கிறோம். இந்த மனிதப்பிறப்பென்பது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் கூடிய அருமையான இறைவனின் படைப்பாகும். இந்த ஆறாம் அறிவினை பயன்படுத்தி நிலையான இன்பம் (பேரின்பம்) , நிலையில்லாத இன்பம் (சிற்றின்பம்) போன்றவற்றினை பிரித்தறிந்து பேரின்பப்பெருவாழ்வினை அடையும் வழியினை கடைபிடித்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மீண்டும் பிறப்பில்லா பெருவாழ்வினை அடைவதே பிறவிப்பயனாகும்.

இதனையே வள்ளுவரும்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

ஒருவர் இல்லறத்தில் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் பொழுது அவரால் தெய்வீக நிலையை அடைய முடியுமா என்ற கேள்விக்கு வள்ளுவர் அழகாகப் பதிலளித்துள்ளார் இந்தக்குறளில். ஒருவர் இல்லற வாழ்க்கையில் வாழ்வதற்கான அடிப்படை நெறிகளை கடைப்பற்றி நெறி தவறாது வாழ்ந்தால் , அதாவது தமிழ் வேதங்களாகிய அறம் , பொருள் , இன்பம் , வீடு என்ற அடிப்படையில் அறவழி நின்று பொருளீட்டி இன்பமாக வாழ்ந்து வீடுபெறுதல் என்ற வழக்கை முறையினை கடைப்பிடித்து வாழ்ந்தால் அவர் வானுறையும் தெய்வத்துக்கு நிகராக வைக்கப்படுவர் என்பது பொருள்.

அப்படி உயிர் இறைவனாகும் தன்மையை கொண்ட அற்புதப் பிறப்பே மனிதப்பிறப்பு. இந்தப் பிறப்பினை அதற்காக பயன்படுத்தாமல் ஐம்பொறிகளின் வழிநின்று, உலகியலில் தொலைந்து , சாதாரண முலையூட்டியாக வாழ்ந்து மடியப்போகிறோம் என்ற எண்ணம் எப்போது வருகிறதோ , அப்போதுதான் நீங்கள் மனிதப்பிறவியை உணருகிறீர்கள் எனலாம்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்

என்ற சிவபுராணத்தில் மணிவாசகப் பெருமானின் வரிகளையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மனிதரை வழிபடும் வகைகள் மற்றும் சிறப்புகள்**

தமிழர் மரபில் மூத்தோர் வழிபாடு , குரு வழிபாடு மற்றும் நீத்தார் வழிபாடு என்று மூன்றுவகையாக மனித வழிபாட்டுமுறையைப் பார்க்கலாம்.

மூத்தோர் என்பவர் , எங்களுக்கு முன்தோன்றி இப்பூவுலகில் வாழ்ந்து வாழ்வியல் அனுபவங்களை பெற்று , அவற்றினைப் பிரித்தறிந்து , அவற்றினை உணர்ந்தவர்களாக வாழ்கின்றனர். இப்படியான மூத்தோரை வழிபடுதல் தமிழர் மரபாக இருந்து வருகிறது. மூத்தோரிலே முதன்மை பெறுவர்கள் பெற்றோர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள். வாழும் தெய்வங்களான இவர்களை நாங்கள் வணங்கி , அவர்களின் ஆசிகளை பெற்று எமது வாழ்க்கையினை கொண்டுசெல்வதே சிறப்பான எளிய வாழ்வியல் தந்திரமாகும்.

**குரு வழிபாடு**

தெளிவினை , ஞானத்தினை , அறிவினை , ஆற்றலினை அடைவதற்கு ஞானகுரு நிச்சயம் தேவை. சாதாரண மனிதராக பிறந்தவர்கள் இந்தவழியில் சென்று ஞானத்தினை பெறுவது இலகுவானது. அத்துடன் நமக்கு கல்வியினை தரும் , கலைகளை ஊடுகடத்தும், அறிவுரைகளை வழங்கும் பெரியோர்களும் குரு எனுமிடத்தில் வருவார்கள். எமக்கு வழிகாட்டுபவர்களை வழிபடுவதும் தமிழர் பண்பாடாக இருந்து வருகிறது.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே - திருமந்திரம்

திருவருளால் திருவடித் தெளிவினை அருளும் சிவமாகிய குருவினை காணுதல் , அதாவது அவரைப் பார்த்தல் மற்றும் அவரின் பெயரை தினமும் சொல்லுதல் அல்லது உச்சரித்தல் ஆகிய புறச் செயற்பாடுகளாலும் அவரிடமிருந்து செவியறிவுறுத் தருளிய திருவைந்தெழுத்தைச் சிறப்புற உளங்கொளக் கேட்டல் மற்றும் அவரது திருவுருவை உள்ளத்துள் உள்வாங்கல் என்னும் அக செயற்பாடுகளாலும் உண்மையான ஞானத்தை உணரமுடியும்.

வாதவூராருக்கு சிவபெருமான் குருவாக வந்து குருந்த மரநிழலில் இருந்து திருவடிதீட்சை கொடுத்து முதலமைச்சராக இருந்த தென்னவன் பிரம்மராயனை மாணிக்கவாசகராக மாற்றி , ஞானத்தினை கொடுத்து இவ்வுலகிற்கு திருவாசகத்தினை தந்ததுடன் வாதவூரரையும் வீடுபெறச் செய்தார்.

இங்கேயும் புறமாக திருவடி தீட்சை கொடுத்து , அகமாக சூக்கும ஐந்தெழுத்தாகிய சிவாயநம என்ற மந்திரத்தினை கொடுத்து ஞானத்தினை கொடுக்கிறார். இதனையே மணிவாசகர்

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே எனப் பாடியுள்ளார்.

**நீத்தார் வழிபாடு வழமை முறைகள்**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மடிந்தவர்களை வழிபடும் மரபு பண்டைய காலத்தில் இருந்தே இருந்துவருகிறது. சங்ககால முறைமைக்கு வருவதற்கு முன்னர் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்ற ஆதித்தமிழர்கள் குமரிக்கண்டத்தில் / தென்னாட்டில் உயிர் நீத்தவர்களை வழிபடுகின்ற வழமைகளில் இருந்தது என்பதற்கு இலக்கியச்சான்றுகள் உள்ளன.

ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,
எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என
அறத்துஆறு நுவலும் பூட்கை, மறத்தின்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ, வாழிய குடுமி! தங் கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,
முந்நீர் விழவின், நெடியோன்
நன்னீர்ப் பறுளி மணலினும் பலவே!

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போருக்குப் போகுமுன் பசு, பார்ப்பனர் (குறி பார்ப்பார், கணி(சோதிடம்) பார்ப்பார் என்போர்), பெண்டிர், பிணியுடையோர், ஆண் பிள்ளை இல்லாதோர் ஆகியோரைப் பாதுகாவலான இடத்திற்குச் செல்லுமாறு அறை கூவிப் பின்னர்ப் போர் செய்தான் என்று நெட்டிமையார் கூறுகிறார்.

இங்கே இந்த வரிகளை கவனித்தால்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்

இறந்த முன்னோருக்குக் கடன் செலுத்தும் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் என குறிப்பிடப்படுகிறது. அத்துடன் இப்பாடலில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை, பஃறுளி ஆற்று மணலினும் பலநாள் வாழ்க என்று நெட்டிமையார் வாழ்த்துவதிலிருந்து இவர் பஃறுளி ஆறு கடலால் கொள்ளப்படுவதற்கு முந்திய காலத்தவர் என்பது தெரிய வருகிறது. முன்னோர் வழிபாடானது தொன்று தொட்டு தமிழர் வாழ்வியலில் பின்னிப்பிணைந்திருக்கிறது.

**நடுகல் வழிபாடே பின்னர் கோவில் வழிபாடாக மற்றும் தமிழாகம முறையாக மாறியது**

மறைந்தவர்களுக்கு குறிப்பாக மறைந்த போர் வீரர்களுக்கு நடுகல் மற்றும் பதுக்கைகள் அமைக்கும் பழக்கம் ஆதித்தமிழர் பண்பாடுகளில் ஆழக்கலந்து இருந்தது என்பதற்கு பல இலக்கிய ஆதாரங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நடுகல் அமைக்கும் வழக்கம் ஆதித்தமிழரிடம் இருந்ததென்பதும் அது சடங்கு முறையாகப் கொண்டாடப்பட்டது என்றும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இது பின்னர் ஆகம முறையாக மாறியது என்று கூறுவதில் மறுப்பதற்கு இடமில்லை.

**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்**

சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மறபிற் கல்லொடு புணர - தொல். புறத்திணை இயல், 5

காட்சி – கல்காண்டல்
ஆனா வென்றி அமரில்வீழ்ந் தோற்குக்
கான நீளிடைக் கல்கண் டன்று - பெரிய வெற்றியைப் பெற்ற போரில் இறந்துவிட்ட வீரனுக்கு நடுகல் செய்யக் காட்டில் கல்லைத் தேர்ந்தெடுத்தல் என்பது மேலுள்ள செய்யுளின் பொருள்

**கால்கோள் என்பது அக்கல்லினை நடுவதற்கு நல்ல நேரம் குறித்தல் / நாள்ப்பார்த்தல்**

கால்கோள் என்பது கல்லைக் கொள்ளுதல் என்பதை குறிக்கிறது. தேர்ந் தெடுத்த நடுகல்லை எடுத்துக் கொணர்தல் என்பது பொருள்.

**(தொடரும்)**



# தென்னாட்டு நிகழ்வுகளின் நிழல்கள்

ஐம்பூத நாதரின் திருக்குடமுழுக்கு நன்னாள் பதிவுகள்



மறைமதி நாளில் தென்புலத்தார் வழிபாடு மற்றும் பேரொடுக்கம் (மகாலய அமாவாசை)



தென்னாட்டுக்கு வருகை தந்த தவத்திரு. வேலன் சுவாமிகள் பக்தியுரை ஆற்றுகின்றார்.



தென்னாட்டுக்கு வருகை தந்த சிவத்திரு ரிஷி - தொண்டுநாதன் அவர்கள் அருளுரை ஆற்றுகின்றார்.





தென்னாட்டுக்கு வருகை தந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா அவர்கள் உரை ஆற்றுகின்றார்.



இவ்வாண்டு, தென்னாடு செந்தமிழாகம சிவ மடத்தில், செந்தமிழ் பூசைப் பயிற்சியை நிறைவு செய்து சிவதீட்சை பெற்ற மாணவர்களும், பயிற்சி வழங்கிய உயிரொளி சிவம். பிரதாபனார் (தலைமை அருட் சுனைஞர், தென்கைலை ஆதீனம், அகில இலங்கை சைவத்தமிழ் அறக்கட்டளை) அவர்களும்

தென்னாட்டில் எழுந்தருளியுள்ள சித்தர்களின் அருட்கோலம்



தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முதலாவது திங்கள் இதழ் "தென்னாடு" சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு , கோப்பாய் "நாவலர் பதிப்பகத்தில்" அச்சிட்டு துலைத் திங்கள் வளர்பிறை 15ம் நாள் (31-10-2020 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது.
தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் , யாழ்ப்பாணம். தொலைபேசி + 94 21 221 2739 ; மின்னஞ்சல் : thennavan@thennadu.org